# விபஸ்ஸனா செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

மலர் - 7, இதழ் - 3, ஜனவரி-2014, தமிழ் மாதப் பத்திரிக்கை

ஒரு மடலின் விலை - ரூ 2.50
ஆண்டு சந்தா - ரூ 30

விபஸ்ஸனா தியான மையம்
தம்ம சேது, சென்னை,
தமிழ்நாடு


# திரு. சத்திய நாராயண கோயங்கா: அக-அமைதியின் தூதுவர் (பாகம் 3)

*[குருஜி திரு. சத்ய நாராயண கோயங்கா அவர்களின் ஒரு சிறிய வாழ்க்கைத் தொகுப்பு.]*

## தம்ம வாக்கு

அதீதம் நான்வாகமெய்ய, நப்பபடிகங்கே அனாகதங்; யதீதங் பஹீனங் தங், அப்பத்தஞ்ச அனாகதங். பச்சுப்பன்னஞ்ச யோ தம்மங், தத்த தத்த விபஸ்ஸதி; அஸம்ஹீரங் அசங்குப்பங், தங் வித்வாமனு ப்ருஹயே. அஜ்ஜேவ கிச்சமாதப்பங் கோ ஜஞ்ஞா மரணங் சுவே; ந ஹி நோ சங்கரங் தேன மஹாசேனேன மச்சுனா. ஏவங் விஹாரிங் ஆதாபிங், அஹோராத்தமதன்திதங்; தங் வே பத்தேகரத்தொ தி ஸந்தோ ஆசிக்கதே முனி.

கடந்த காலத்தில் வாழாமலும், வரப்போவதைப் பற்றி ஏங்காமலும் ஒருவர் இருக்க வேண்டும். கடந்த காலம் முடிந்துவிட்டது. எதிர்காலம் இன்னும் வரவில்லை. ஆனால், நிகழ்காலத்தில், அவர் ஒவ்வொரு நிகழ்வுகளையும் திடமாக, ஞானத்துடன் கவனிக்கின்றார். அறிவுள்ளவர்கள் இவ்வாறு பயிற்சி செய்ய வேண்டும்.
இன்றே திடமாக பயிற்சி செய்யுங்கள். யாருக்கு தெரியும், நாளை மரணம் வரலாம்? மரணத்துடன் நமக்கு எந்தவித ஒப்பந்தமும் இல்லை. ஆகவே, இரவும் பகலும் மும்முரமாக பயிற்சி செய்துகொண்டு வருவோர்களுக்கு, ஒரு இரவும் கூட மங்களகரமானது தான். இதுவே பேரமைதிமிக்க முனிவரான புத்தரின் அருள் வாக்காகும்.

**பத்தேகரத்தசுத்தங், மஜ்ஜிமநிகாயம்**



## இந்தியாவில் . . .

ஆரம்ப காலத்தில், அவர் ஹிந்தியில் தான் கற்பித்தார். அவரது நற்பெயர் பரவியதும், வெளிநாட்டினர் அவரிடம் கற்க விரைந்தனர். 1970களின் ஆரம்ப காலத்தில், பல மேலைநாட்டினர் ஏதோவொரு தேடலுக்காக இந்தியாவிற்கு வந்தனர். ஆனால் அந்த தேடல் எதற்காக என்பதை அவர்களால் அரிந்துகொள்ள முடியவில்லை. அவர்களுள் சிலர் தங்களை 10நாள் முகாம்களில் சேர்த்துக்கொள்ளும் படி கோயங்காஜியிடம் வலியுறுத்தினர். ஆனால் தமக்கு ஆங்கிலம் தெரியாது என்று கோயங்காஜி அவர்களுக்கு பதிலளித்தார். சிறுதும் தளராத அம்மாணவர்கள், மியான்மரிலுள்ள ஊ பா கின் அவர்களுக்கு கடிதம் எழுதினர். விரைவிலேயே யங்கூனிலிருந்து ஒரு கடிதம் வந்தது. கோயங்காஜி ஆங்கிலத்தில் முகாம்கள் அளிக்குமாறு ஊ பா கின் அவர்கள் அக்கடிதத்தின் மூலம் வலியுறுத்தினார். எப்பொழுதும் போல, அவர் தமது ஆசிரியரின் கட்டளையை ஏற்றார்.

முதல் ஆங்கில முகாம் 1970ம் ஆண்டு அக்டோபர் மாதம் இமாலயத்தில் உள்ள மலைவாழிடமான டல்ஹௌஸியில் நடைபெற்றது. அவ்விடத்திலும், அதன் பின்னர் புத்தர் பூரண மெய்ஞானம் அடைந்த தலமான போத்கயாவிலும், இளம் மேலைநாட்டினர் பெரும் எண்ணிக்கையில் கோயங்காஜியை அணுகினர். அவர்களுள் சிலர் இந்து மத துறவிகளைப் போல் அரை ஆடைகளுடனும், சடைமுடியுடனும் காணப்பட்டனர். வேறு சிலரோ, கடற்கரையில் விடுமுறை அனுபவிப்பதற்கு உகந்த ஆடைகளை அணிந்திருந்தனர். ஆண்களில் பெரும்பான்மையினர் தாடி வளர்த்திருந்தனர்; பெரும்பான்மையான பெண்கள் தலைமுடியை நீளமாக வளர்த்து, முறையான இந்தியப் பெண்மணியினரைப் போல் அதை ஒழுங்குபட பின்னலிட்டு இராமல் தோள்களில் விரித்துவிட்டிருந்தனர். இந்த அலங்கோலமான தோற்றம் கோயங்காஜியிடம் எந்தவித மாறுபட்ட உணர்வையும் தோற்றுவிக்கவில்லை. தன்னிடம் வந்தவர்கள் அனைவரிடமும் அவர் தம்ம பொக்கிஷத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர்களுள் சிலர் ஒரு 10-நாள் முகாமில் பங்கேற்று, பின்



அங்கே தென்படவேயில்லாமல் போயினர். வேறு சிலர் நாடெங்கும் முகாம்முகாமாக கோயங்காஜியை பின்தொடர்ந்து சென்றனர். அவர்களுள், பிற்காலத்தில் வேறு மரபுகளில் நன்கு அறியப்பட்டவர்களாக ஆனவர்களும் சிலர் இருந்தனர். கோயங்காஜியால் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களுள் தற்சமயம் மிக மூத்தவர்களாக விளங்குபவர்களும் அவர்களுள் இருந்தனர்.

விரைவிலேயே, மேலை நாட்டினருக்கான தேநீரகங்களிலும் உணவிடங்களிலும் விபஸ்ஸனா முகாம்கள் குறித்த அறிவிப்புகள் காணப்படலாயின. புத்தரின் போதனை பற்றிய புராதான பாக்களையும், தாமே இயற்றிய இந்தி மற்றும் இராஜஸ்தானிய மொழி செய்யுட்பாக்களையும் தமது இனிய, செறிவான குரலில் ஓதுவாராகையால் கோயங்காஜி "பாடும் குரு" என்று சிலரால் அழைக்கப்பட்டார். தியானக் கூடத்தின் அமைதியின் ஊடே, குளிர்ந்த காலை நேரம் அல்லது முன்னிரவு நேரத்தில் அவரது பாடுதல் காற்றினிலே நல்லதிர்வுகளை உருவாக்கி, கேட்போருக்கு சமாதானம் அளிப்பதாக, நல்வழிகாட்டுவதாக, எழுச்சியூட்டுவதாக அமைந்திருக்கும்.

.முகாமின் தொடக்கத்தில், அவர் உள்ளே வந்து வீற்றிருந்து, மாணவர்கள் தம் இருக்கைகளைக் கண்டறிந்து அமர்ந்து அமைதிப்படும் வரையில் மௌனமாக காத்திருப்பார். பின் அவர் தம் வாயைத் திறக்க, நொடிப்பொழுதில் அந்த இடம் - பாழடைந்த வாடகை அறையோ அல்லது குளிர்காற்று வீசும் கொட்டகையோ - காலத்தை வென்றதொரு நல்லிடமாக, தமக்குள்ளே உறையும் உண்மைகளை ஆராய்ந்தறிவதில் அனைவரையும் ஈடுபடுத்தும் ஆய்விடமாக உருமாறிப் போகும். ஒவ்வொரு மணி நேரமும் அவர் தம் மாணவர்களுடனேயே அங்கேயே இருப்பார். பாக்கள் ஓதுதல், நாள் முழுதும் அறிவுறுத்தல்களை வழங்குதல், மாலையில் சொற்பொழிவு முதலிய அனைத்தையும் அவர் நேரடியாகவே வழங்குவார். அவரிடத்திலிருந்து தம்மம் பெருகிப் பாய்ந்தது.

இரவு 9 மணிக்கு தினசரி நிகழ்ச்சி நிறைவு பெறும். இளங்காலை குளிரில் தொடங்கி நாள் முழுதும் செயலாற்றிய மாணவர்கள் சோர்வடைந்திருப்பர். ஆனால், இரவு கேள்வி நேரத்தை இழக்க விரும்பாமல் மாணவர்கள் கிட்டதட்ட அனைவருமே கூடத்திலேயே அமர்ந்திருப்பர். கோயங்காஜியின் முன்னர் வரிசையாகவோ அல்லது அவரைச் சுற்றி கூட்டமாகவோ நிற்பர். சிலர் அவரிடம் சவாலாகவோ, அவருடன் விவாதம் செய்யும் வகையிலோ கேள்விகள் கேட்பர். வேறு சிலரோ உண்மையிலேயே குழம்பி போயிருப்பர் அல்லது மனக்கலக்கம் கொண்டிருப்பர். சிலர் தமது கருத்து சரியானதே என்பதை உறுதிபடுத்திக்கொள்ள விழைவர். இன்னும் சிலரோ அவரது கருத்து தவறானது என்று நிரூபிக்க முயல்வர். கோயங்காஜி ஒவ்வொருவரையும் புன்னகையோடு, மென்மையாக எதிர்கொள்வார். அடிக்கடி அவர் வாய்விட்டு சிரிப்பதும் உண்டு. பெரும்பாலும், கேள்வி கேட்டவர்களும் அவரோடு சேர்ந்து சிரித்துவிடுவார்கள். அவர் என்ன சொன்னார் என்பது கூட அவர்களுக்கு நினைவில்லாமல் போகலாம்; என்றாலும், அவர்கள் தமக்கு வேண்டிய விடை கிடைத்ததாகவே உணர்வார்கள்.

முகாமின் முடிவில் அவர் ஒரு நிறைவுச் சொற்பொழிவு ஆற்றி, மாணவர்களுடன் சில நிமிடங்கள் தியானம் செய்வார். பின் அவர், "ஸப்ப கா மங்கள - அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும், அனைவரும் மகிழ்ச்சியாக இருக்கட்டும்," என்று இந்தியில் பாடியபடி கூடத்திலிருந்து வெளியேறிச் செல்வார். தெருவில் கூவிக் கூவி விற்கும் வியாபாரிகள், குரைக்கும் நாய்கள், சந்திக்க வேண்டிய நண்பர்கள் மற்றும் அன்புக்குரியவர்கள், படிக்கப்பட வேண்டிய கடிதங்கள், பிடிக்க வேண்டிய இரயில், தீட்ட வேண்டிய திட்டங்கள் இவற்றின் இடையே சிக்குண்டு தியான மாணவர்கள் இந்திய நகரங்களுள் ஒன்றில் தத்தமது அழுக்கான அறைகளுக்கு திரும்பிச் செல்வர். என்றாலும், அவர்களுள் பெரும்பாலானவர்களுக்கு ஏதோ ஒரு மாற்றம் தெரியும். அவர்களது வாழ்க்கை முன்போல இருக்காது.

## கடனை அடைக்க இதுவே வழி

கோயங்காஜி தனது ஆசிரியரிடம் தகவலறிக்கை தந்துகொண்டே இருந்தார். ஊ பா கின் அவர்களும் அந்த கடிதங்களால் பெரிதும் மகிழ்ச்சி கொண்டார். ஒரு முகாமில் 37 மாணவர்கள் பங்கேற்றனர்; ஊ பா கின் அவர்கள் பேருவகை அடைந்தார். பழங்கால பாலி மொழி நூல்களில் உள்ள குறிப்பைச் சுட்டிக் காட்டி, "பூரண மெய்ஞானம் அடைய தேவையான காரணிகள் முப்பத்தேழில் ஒவ்வொன்றுக்கும் ஒருவர்," என்று அவர் தமது மாணவர்களிடம் கூறினார். கோயங்காஜி 100 மாணவர்கள் கொண்ட முகாமை நடத்தியதைப் பற்றி தெரிவித்தபொழுது அவர் இன்னமும் அதிகமாக உவகை கொண்டார். அதுவும்கூட ஒரு சிறிய முகாமாகவே கருதப்படும் நாள் வரும் என்று ஒருவரும் நினைத்தும் பார்க்கவில்லை.

1971ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கோயங்காஜி அவர்கள் போத்கயாவில் உள்ள பர்மீய புத்த விகாரத்தில் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தபொழுது ஒரு நாள் ஸயாஜி ஊ பா கின் அவர்கள் காலமானார் என்கிற செய்தியைத் தாங்கி ஒரு தந்தி வந்தது. கோயங்காஜி மாணவர்களிடம், "ஒளிவிளக்கு அணைந்துவிட்டது," என்றார். அந்த இழப்பை அவர் பெரிதும் உணர்ந்தார். ஆனால், விரைவிலேயே, அவர் தமது ஆசிரியரின் முன்னிலையை முன்னிலும் அதிகமாக உணர்ந்தார். இறுதியில் ஊ பா கின் அவர்கள் இந்தியாவிற்கு வந்து தம்மோடு இணைந்ததாகவே அவர் உணர்ந்தார்.

பணியைத் தொடர்வதைத் தவிர செய்வதற்கு வேறு என்ன இருக்கிறது? துன்பத்திலிருந்து மீளவே முடியாது என்று அவர் நினைத்திருந்தபொழுது அவரது ஆசிரியர் அவருக்கு உதவியிருந்தார். அவருக்கு ஊ பா கின் அவர்கள் அன்புடன் விபஸ்ஸனா கற்றுக் கொடுத்து, கற்றுவிக்கவும் பயிற்சி தந்தார். அவர் கோயங்காஜியை ஆசிரியராக நியமித்து, அவருக்கு இயக்கம் ஒன்றையும் தந்து அவரை வழியனுப்பி வைத்தார். கோயங்காஜி இந்த இயக்கத்தை தனது வாழ்வின் இறுதி வரை தொடர்ந்தார்.. முகாமின் ஒவ்வொரு நாளும் காலை ஓதுதலின் பொழுது அவர் தாமே பின்வருமாறு கூறுவார்:

"ஒவ்வொரு நுண்துளையிலிருந்தும் நன்றியுணர்வு பெருகுகின்றது, இந்த கடனை என்னால் ஒருபோதும் அடைக்கமுடியாது. தம்ம வாழ்க்கை வாழ்வதே, துயருற்ற மக்களுக்கு சேவை செய்வதே, தம்மத்தின் பேரானந்தத்தை அனைவருடனும் பகிர்வதே, கடனை அடைக்க ஒரே வழி.

எனவே அதைத்தான் அவர் செய்தார். இந்தியாவின் தென்கோடியிலிருந்து இமாலயம் வரை, மேற்கு குஜராத்தின் பாலைவனங்களிலிருந்து வங்காளத்தின் காடுகள் வரை, கோயங்காஜி இவ்வாறே தொடர்ந்து பணியாற்றினார். நிலப்பரப்பு மாறியது, முகங்கள் மாறின, வயதாகியதால் அவரது தோற்றம் கூட மாறியது; ஆனால், அந்த பயணம் தொடர்ந்துகொண்டே இருந்தது.

(அடுத்த இதழில் தொடரும் . . .)

### புண்ணிய பலன்கள் பெற ஒரு அரிய வாய்ப்பு

தமிழகத்தின் இரண்டாவது விபஸ்ஸனா தியான மையமான 'தம்ம மதுரா'வை நிறுவும் பணி மகிழ்ச்சிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆரம்பகட்டமாக 15 தியானிகள் தங்குவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு தியான முகாமும் தொடங்கப்பட்டுவிட்டது. இதற்கான நன்றி உடல், மனம் மற்றும் பொருள் அளவில் உவகை உள்ளத்துடன் உதவிய தியான சாதகர்களையே சாரும். முதற்கட்டமாக 40 தியான சாதகர்கள் தங்குவதற்கான இருப்பிடங்கள் கட்டும் பணி 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு வேலையும் மும்முரமாக நடைபெற்று வருகிறது. தற்போது கைவசம் 40 லட்சம் ரூபாய் மட்டும் உள்ளதால் மீதம் 30 லட்சம் ரூபாய் தேவைபடுகிறது. நன்கொடை செலுத்த வேண்டிய வங்கி மற்றும் தொடர்பு விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| Bank | State Bank of India, Anaiyur Branch, Madurai, | Account number | 31262542660 |
| Account Name | VIPASSANA MEDITATION CENTRE, MADURAI, | SBI branch IFS Code | SBIN0012764 |
| SBI Swift code | SBININBB454, | | |
| Contact Mobile No. | 9443728116 / 9442603490 | Email ID | dhammamadhura@gmail.com |

RNI TC NO: TNTAM 17399/26.03.07, RDIS NO: 126/07,
REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA NO: TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/14-16

# விபஸ்ஸனா முகாம்கள் கால அட்டவணை

## தம்ம மதுரா

**விபஸ்ஸனா தியான மையம், செட்டியாபட்டி கிராமம், திண்டுக்கல், காந்திகிராம் பல்கலைக்கழகம் அருகில்**

2014 10-நாள் முகாம்கள்: **ஜனவரி: 8-19. பிப்ரவரி: 5-16, மார்ச்: 5-16. ஏப்ரல்: 2-13. மே: 7-18. ஜூன்: 4-15. ஜூலை: 2-13. ஆகஸ்டு: 6-17. செப்டம்பர்: 3-14. அக்டோபர்: 1-12. நவம்பர்: 5-16. டிசம்பர்: 3-14.**

**3-நாள் முகாம்கள்:** ஜனவரி: 4-7. பிப்ரவரி: 1-4. மார்ச்: 1-4. ஏப்ரல்: 14-17. மே: 3-6. ஜூன்: 15-18. ஜூலை: 14-17. ஆகஸ்டு: 2-5. அக்டோபர்: 12-15. **சிறுவர் முகாம்கள்:** 19/1, 16/2, 16/3, 13/4, 18/5, 13/7, 17/8, 14/9, 16/11.

பதிவு செய்ய: 1. திருமதி. ரேணுகா மேத்தா - 9443728116 / 9442603490, 2. திரு. மகேஷ் பன்சல் - 9843451153

இணையதளம் மூலம் பதிவு செய்ய:
<http://courses.dhamma.org/en/schedules/schmadhura,
மின் அஞ்சல்: dhammamadhura@gmail.com

## தம்ம சேது

**விபஸ்ஸனா தியான மையம், 533, பழந்தண்டலம் சாலை, திருநீர்மலை வழி, திருமுடிவாக்கம், சென்னை**

### 2014 கால அட்டவணை

**10-நாள் முகாம்கள்: ஜனவரி:** 1-12, 15-26. **பிப்ரவரி:** 19-2, **மார்ச்:** 5-16, 19-30. **ஏப்ரல்:** 9-20, 23-4. **மே:** 14-25. **ஜூன்:** 4-15. **ஜூலை:** 2-13, 16-27. **ஆகஸ்டு:** 30(ஜூலை)-10, 13-24. **செப்டம்பர்:** 3-14. **அக்டோபர்:** 22-2(நவம்பர்). **நவம்பர்:** 12-23, 26-7(டிசம்பர்). **டிசம்பர்:** 10-21, 24-4(ஜனவரி); **ஸதிபட்டான முகாம்கள்: பிப்ரவரி:** 1-9. **ஜூன்:** 21-29. **செப்டம்பர்:** 18-26

**20-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 9 அக்டோபர் வரை, **30-நாள் முகாம்:** 18 செப்டம்பர் முதல் 19 அக்டோபர் வரை. **3-நாள் முகாம்கள்:** ஜனவரி: 29-1. பிப்ரவரி: 13-16. ஏப்ரல்: 3-6. மே: 8-11, 29-1. ஜூன்: 18-21. ஆகஸ்டு: 28-31. நவம்பர்: 6-9. **1-நாள் முகாம்கள்:** 5/1, 2/2, 2/3, 6/4, 4/5, 14/5(புத்த பௌர்ணமி), 1/6, 6/6, 12/6(குரு பௌர்ணமி), 3/8, 7/9, 5/10, 2/11, 7/12. **சிறுவர் முகாம்கள்:** ஏப்ரல் 20. மே 11, 25. டிசம்பர் 28.

### ஒரு நாள் தியான முகாம்கள்

*1. இடம்: பாலானந்தா வித்யாலயா, 64 பர்கிட் சாலை, தி.நகர். நேரம்: ஞாயிறு காலை 9:00 முதல் 3:00 மணி வரை (தொலைபேசி: 9445391295)*

*2. இடம்: அகர்வால் வித்யாலயா, 54, ஈ.வி.கே ஸம்பத் சாலை, வேபேரி, தினத்தந்தி அலுவலகம் அருகில், சென்னை. நேரம்: ஞாயிறு காலை 9:00 முதல் 3:00 மணி வரை (தொலைபேசி: 9841591734)*

*2. கோவை: மாதத்தின் கடைசி ஞாயிறு. (தொலைபேசி: திரு. பரத் ஷா: 9842347244*

### கூட்டுத்தியானம்

*1.* **கோவை:** *ஞாயிறுதோறும் காலை 8 முதல் 9 வரை (தொலைபேசி: திரு மகேஷ்: 9843451153)*

### மற்ற இடங்களில் 10-நாள் முகாம்கள்

**1. இடம்**: *அரவிந்த் ஹெர்பல்ஸ், இராஜபாளையம்;* **தேதி:** *பிப்ரவரி 26 முதல் மார்ச் 9 வரை, 2014;* பதிவு செய்துகொள்ள: 1. திருமதி அருணா: 9150131335

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER; Published on: 04/01/2014, Posted on: 13/1/2014
POSTED AT EGMORE ,
RMS/1 (PATRIKA CHANNEL)

*அனுப்புனர்:* Vipassana Meditation Centre, T2 Akshaya Flats, 55-Irusappa st, IceHouse, Chennai 5